# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2017.05.29

ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் :15 / 2017

பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**உதவிச் செயலாளர் (Assistant Secretary) / உதவிப் பதிவாளர் (Assistant Registrar) / உதவிக் கணக்காளர் (Assistant Accountant) / உதவி நிதிப் பொறுப்பாளர் (Assistant Burser) / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் (Assistant Internal Auditor) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள்.**

2011.03.10 ஆம் திகதிய 948 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் விதித்துரைக்கப்பட்டுள்ள உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் /உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மீதும் 2010.06.23 ஆம் திகதிய 922 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் அப்பதவிகளுடன் தொடர்பான வினைத்திறன் தடை தாண்டல் தேவைகள் மீதும் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. 2017.06.01 ஆம் திகதி நடைபெற்ற தனது 965 ஆவது கூட்டத் தொடரின்போது மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய அப் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும்போது ஏற்புடையதாக்கிக் கொள்ளும் முறையில் திருத்தம் மேற்கொள்வதற்கு ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

03. அதற்கமைய, வெளிவாரி மற்றும் உள்ளக பிரிவுகளின் கீழான சகல விண்ணப்பதாரிகளும் அவர்களது தகைமைகளை உறுதிப்படுத்தாமல் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுவதுடன், அதன் பின்னர் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் மாத்திரம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியன்று ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய உரிய தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்துகொள்ளுமுகமாக பரீட்சிக்கப்படும்.

04. விண்ணப்பதாரிகளுக்கு உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் /உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் எனும் ஒவ்வொரு பதவிகளுக்குமான எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் இரண்டு சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்; அதாவது எவரேனுமொரு உள்ளக விண்ணப்பதாரி உள்ளக பிரிவின் கீழ் 02 தடவைகள் மற்றும் வெளிவாரிப் பிரிவின் கீழ் 02 தடவைகள் என ஏதேனுமொரு பதவிக்காக இரண்டு பிரிவுகளின் கீழும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனுமொரு விண்ணப்பதாரி தகைமை பெறுவாராயின் அவருக்கு மொத்தம் 04 சந்தர்ப்பங்கள் கிடைக்கும். அதற்கமைய, விண்ணப்பதாரிகளுக்குரிய இரண்டு சந்தர்ப்பங்களை கணக்கிடும் நடவடிக்கை அடுத்து நடைபெறும் எழுத்து மூலப் பரீட்சையிலிருந்து ஆரம்பிக்கப்படுவதுடன், ஏற்கனவே, நடைபெற்ற பரீட்சைகளுக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கும் இது ஏற்புடையதாகும்.

*2 ஆம் பக்கத்திற்கு...........*

05. வெளிவாரிப் பிரிவின் கீழான விண்ணப்பதாரிகள் 22 – 30 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளகப் பிரிவின் கீழான விண்ணப்பதாரிகள் 53 வயதைத் தாண்டாதவராக இருத்தல் வேண்டும்.

06. எவ்வாறாயினும், எதிர் காலத்தில் நடைபெறும் எழுத்து மூலப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு மேலே 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 02 சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குமுகமாக, உள்ளக விண்ணப்பதாரிகளுக்கான 53 எனும் உச்ச வயதெல்லை அடுத்த கிட்டிய ஆட்சேர்ப்புக்காக வெளியிடப்படும் அறிவித்தலில் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியிலிருந்து ஆரம்பமாகும் 05 வருட காலத்திற்கு கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

07. அதற்கமைய, திருத்தங்கள் முறையே இணைப்பு I மற்றும் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் /உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை 2017.07.03 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

08. 922 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் /உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுடன் தொடர்பான வினைத்திறன் தடை தாண்டல் தேவைகளும் வினைத்திறன் தடை தாண்டல் தேவைகளில் விதித்துரைக்கப்பட்டுள்ள “குறிப்பு” என்பதற்கு பதிலாக “ஆங்கிலம்” எனும் வசனத்திற்குப் பின்னர் “பாடமொன்றாக” எனும் வசனத்தைச் சேர்த்து திருத்தியமைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

09. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள்/ உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/160